# எம்பெருமானின் தியானப் படிகள்.

(ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த பகவத் த்யான ஸோபனம்)

தமிழில் : பொய்கையடியான் ஸ்வாமிகள்

ஸோபனம் என்றால் படிகட்டுகள். எம்பெருமானைத் திருபாதம் முதல் திருமுடிவரை அனுபவிக்கும் தோத்திரமாக அமைந்துள்ளது



ஞானம் நிறைந்தவர்களின் இதயங்களில் ப்ரகாசிக்கின்றதாய்,

ஞானக்கண்களுக்கு அஞ்சனம் போன்று விளங்குகின்றதாய்;

ஞாயமான போகங்களையும் முக்தியையும் தரவல்லதாகின்ற,

ஞாலம் போற்றும் தெய்வம் அரங்கத்தில் காணப்படுகின்றது. 1.

வேதங்களின் மணம் வீசிட நான்முகனால் வணங்கப்பெற்ற ,
ஓதம்நிறைந்து அன்னங்கள் உறையும்திட்டில் தோன்றப்பெற்ற ;
சீதக்கரங்களால் ஸ்ரீ, பூ தேவிகளால் வருடப்பெற்றதாயுமுள்ள ,
பாதங்கள் அடியேனின் நினைவென்னும் பொய்கையிலுள்ளது. 2.

தண்டைகளின் ஒளி பல்வகையான நிறங்களைக் கொண்டதாய்,
சண்டைதவிர்க்க பாண்டவர்க்காக விரைந்த நடையுள்ளதாயுள்ள;
கெண்டையின் எழிலால் அழகு இரட்டிப்பு ஆக்கப்பெற்றதாயும் ,
கண்டையை சேவித்த என்தனுயிர் அலைபாய்வதை விடுகிறது 3.

மன்மதத்தோட்ட வாழைமரங்கள் பீதாம்பரம் அணிந்தது போன்று,
திரு, பூ, நீளா தேவிகளின் தலையணைபோன்று அமைந்ததான ;
மனம்கவர் மேகலை ஒளிகளால் விளங்குமிரு அழகுவெள்ளமான,
திருவரங்க வாலிபனின் துடையிணையை புத்தி அனுபவிக்கின்றது. 4.

அழகியஆழமான தோற்றமுடன் வுலகைத்தன்னுள் மறைத்துவைத்து,
மகரந்த துகள்கள்மிளிர தாமரையில் பல நான்முகனைப் படைத்தாய் ;
அழகிய சுழல்களுடன் அழகுடன் கூடிய அத்திருவரங்க நகரப்பனது ,
நிகற்ற திருவுந்தி நிமிடந்தோறும் என் உள்ளத்தை மகிழ்விக்கின்றது. 5.

திருவத்ஸமெனும் மறுவினால் பெருமையும் திருவின் திருவடியும் ,
சிறந்தகௌஸ்துப ரத்னத்தின் ஒளியால் சிவந்த நிறம் பெற்றதுமான;
திருத்துழாயில் பலநிறங்கொண்ட வனமாலையால் குளிர்ந்தஒளியும்,
பரந்த இருதோள்களுக்கு இடையே மார்பு என்தாபத்தை ஒழிக்கின்றது. 6.

எல்லோர் விருப்பங்களையும் நிறைவேற்றவல்ல கற்பக விருக்ஷமாய்,
விளையாட்டாய்தலையணையாக வல, முழந்தாள்வரை இடக்கரமும் ;
என்தன் செருக்கொண்ட நினைவென்னும் பெண்யானை ஒளியென்னும்,
விசித்ரமான கட்டுத்தறியில் பிணிக்கப்பட்டு கட்டுண்டு அனுபவிக்கிறது .7.

புன்சிரிப்பில் கருத்து நிறைந்த சிவந்த கோவைக்கனிபோன்ற உதடுகள் ,

துன்பம் நீங்குவதை விரும்புகின்ற பக்தர்களிடத்தில் கடாக்ஷிப்பதாயுள்ள;

பொன்னாலாகிய திலகத்தாலழகுபெற்று வரவுகூறும் கண்களையுடைய,

இன்பமளிக்கும் அரங்கன் திருமுகம் என்னுள்ளத்தில் ஆழ்ந்துபடிகின்றது. 8

மலர்மாலைகளினால் நிலைபெற்ற மணமுடையவனாய் அரங்கத்துள்ளே ,

தலைவிமார்களின் திருக்கரங்கள் பட்டதால் மதிப்பும் வக்ரமானவையான ;

பலநிறம்பெற்ற ரத்தினங்களின் முடி மாலைகளின் ஒளிகளால் மின்னும்,

தலைக்ரீடத்தில் என்தனுள்ளம் நிலையான இருப்பைப் பெற்றுவிட்டனவே9

இந்த புத்தியானது அரங்கனின் திருவடிகளைத் தொடுகிறது,

கணைக்காலைசேவித்து இருதொடைகளில் நன்கு படிகிறது ;

அந்தத்திருவுந்திதனை நெருங்கியபின்பு திருமார்பில் தங்கிவிட .

இணையற்ற கைகளும், திருமுகமும், கிரீடத்தில் நிலைக்கிறது . 10.

கொடையில் சிறந்த கைவளை நாண்தழும்பு பதியப்பெற்று ,

பிராட்டி தங்குமிடமான மார்பிற்கு பாதுகாப்பான கரங்களில்;

படையாயுதங்களுடன் ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டவன்,

பிராட்டிகளுடன் தன்முன்னே உத்ஸவராக உறைகின்றான். 11.

பகவத் விஷயங்களில் சுவையுள்ளவரால் போற்றுப்பெற்ற ,

யோகிகளின் பணிவிடைகளை யேற்று, வேங்கடகவிபாடிய ;

பகவத்யான ஸோபனமென்ற தோத்திரத்தை படித்தவர்கள்,

யோகிகளின் நிலையை அடைய மனவுறுதியை அளிக்கட்டும் . 12.

***********************************************